**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 260 நாள்: 02.07.2026

**தேனாம்பேட்டை மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (02.07.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், மெரினா கடற்கரையில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள், அப்பகுதியில் உள்ள இரவுக் காப்பகம், லூப் சாலையில் உள்ள மீன் அங்காடி, வார்டு-119க்குட்பட்ட அம்மையப்பன் சந்து பகுதியில் சமுதாய நலக்கூடம் அமைக்கப்படவுள்ள இடம், வார்டு-113க்குட்பட்ட வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள இரத்த சுத்திகரிப்பு மையம், மழைநீர் வடிகால் பணிகள், நுங்கம்பாக்கம் கால்வாய், வண்டல் மண் வடிகட்டி தொட்டியில் இருந்து வண்டல் மண் அகற்றுதல் உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**